தினமலர்
உண்மையின் உரைகல்

## வெற்றிலை கொடிக்கால், அகத்தி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,01:07 IST

தேனி:பெரியகுளம் பகுதியில் வெற்றிலை கொடிக்கால்களில், அகத்தி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது.பெரியகுளம், ஜெயமங்கலம், மேல்மங்கலம், தேவதானப்பட்டி, குள்ளப்புரம் உட்பட பல கிராமங்களில் வெற்றிலை சாகுபடி அதிகம் நடந்து வருகிறது.
வெற்றிலை கொடிக்கால்களில், அகத்தி செடிகளை வளர்த்து, அதன் மேல் விவசாயிகள் வெற்றிலை கொடிகளை பரவ விட்டுள்ளனர்.தற்போது நிலவும் வறண்ட பருவநிலை காரணமாக, அகத்தி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது.செடிகளில் ஊர்ந்து செல்லும் எறும்புகள் மூலம் இந்த மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் பரவி வருகிறது. இதனை தடுக்கும் வழிமுறைகள் குறித்து, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் முருகன் கூறியதாவது:
லிண்டேன் 0.3 சதவீதம் தூளை அகத்தி செடிகளின் அடிப்பகுதியில் தூவி எறும்புகளை கட்டுப்படுத்த வேண்டும்.குளோர்பைரிபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லியுடன் ஒட்டும் மீன் எண்ணெய் ரெஸின் சோப்பினை ஒரு லிட்டருக்கு 25 கிராம் வீதம் கலந்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். 15 நாள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளித்து கட்டுப்படுத்த வேண்டும், என்றார்.

## வாழை சாகுபடியை 30 ஆயிரம் ஹெக்டேராக உயர்த்த இலக்கு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,01:05 IST

தேனி: மாவட்டத்தில் வாழை சாகுபடியை, ஏழாயிரம் ஹெக்டேரில் இருந்து, 30 ஆயிரம் ஹெக்டேராக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தற்போது ஏழாயிரம் ஹெக்டேரில், வாழை சாகுபடி செய்யப்படுகிறது. வாழை ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்து வருவதால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. தற்போது கிலோ வாழைக்காய் 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விரைவில் 20 ரூபாயாக உயரும் வாய்ப்புகள் உள்ளன.
தவிர வெளிநாடுகளுக்கு அதிகளவில், ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இன்னும் தேனி

மாவட்டத்தில் விளைச்சல் போதவில்லை. வெளிநாடுகளில் உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு வாழை தொடர்ந்து ஏற்றுமதி செய்ய குறைந்தபட்சம் 30 ஆயிரம் ஹெக்டேராவது சாகுபடி செய்ய வேண்டும். பல வெளிநாடுகள் ஏற்றுமதி ஆர்டர் வழங்கி வருவதால், மாவட்டத்தில் வாழை உற்பத்தியை 7 ஆயிரம் ஹெக்டேரில் இருந்து 30 ஆயிரம் ஹெக்டேராக உயர்த்தும் முயற்சியில் தோட்டக்கலைத்துறை இறங்கி உள்ளது.காற்றினால் வாழை அதிகம் பாதிக்கப்படுவதை தடுக்க போடி, சிலமலை, ராசிங்காபுரம் பகுதியில் சித்தகத்தி செடிகளை வளர்த்து உயிர்வேலி அமைத்து காற்றை தடுத்து அதற்குள் வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.
அதேபோல் கோவிந்தநகரம், ஏத்தக்கோயில், வெங்கடாசலபுரம், கடமலை, மயிலை பகுதிகளிலும் வாழை சாகுபடி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## புளியங்குடியில் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,01:36 IST

திருநெல்வேலி : விதை சான்று துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் புளியங்குடியில் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாலசுப்பிரமணியம் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்தார். விதைகளின் வகைகள் மற்றும் விதை சான்று நடைமுறைகள் குறித்து நெல்லை விதை சான்று உதவி இயக்குனர் அசோக்குமார் பேசினார். வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள், விதை சான்று அலுவலர் சுரேஷ், விதை சான்று அலுவலர் சிவகுருநாதன், விதை சான்று அலுவலர் அசோகன் உட்பட பலர் பேசினர். விதை பரிசோதனை செய்யும் முறைகள் மற்றும் விதை சட்டங்கள் குறித்து உற்பத்தியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

## கொப்பரை தேங்காய் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்த வேண்டும்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,01:17 IST

உடன்குடி : தென்னை விவசாயிகளின் நலன் கருதி கொப்பரை தேங்காய் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்த வேண்டும் என தூத்துக்குடி தெற்கு மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.
தூத்துக்குடி தெற்கு மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலச் சங்க கூட்டம் நடந்தது. உடன்குடி ஒன்றிய தலைவர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். உடன்குடி பஞ்.,யூனியன் முன்னாள் சேர்மன் ராஜரெத்தினம், உடன்குடி டவுன் பஞ்.,முன்னாள் தலைவர் சாகுல்ஹமீது

ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் உடன்குடி பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளுக்கு தமிழக அரசு உடனடியாக அடையாள அட்டை வழங்க வேண்டும். மேலும் கொப்பரை தேங்காய்க்கு மத்திய அரசு வழங்கும் நிர்ணய விலையான ரூ.51ஐ தமிழக அரசு கூடுதல் மானியம் வழங்கி ரூ.65 ஆக உயர்த்தி வழங்க வேண்டும், உடன்குடி பகுதியை சுற்றியுள்ள பகுதிகளில் எப்போதும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால் உடன்குடியில் மட்டும் மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை. விவசாயிகளின் நலன் கருதி உடன்குடி பகுதியிலும் நாள் முழுவதும் மும்முனை மின்சாரம் வழங்க தமிழக முதல்வரை கேட்டுக் கொள்கிறோம். தமிழக அரசு கன்னடியன் கால்வாய் திட்டத்தை ரூ.100 கோடி செலவில் செயல்படுத்தவுள்ளது. இக்கால்வாய் மூலம் உடன்குடி பகுதியில் புதிய நீர் பிடிப்பு குளங்கள் அமைத்து உடனடியாக இத்திட்டம் செயல்படுத்த தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம். உடன்குடி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பட்டா, சிறுவிவசாயிகள் சான்று, அடங்கல் போன்ற ஆவணங்களை அதிகாரிகள் உடனடியாக வழங்குவதில்லை. சமபந்தி நிகழ்ச்சிகளில் பெறப்படும் மனுக்களுக்கு கூட அதிகாரிகள் மிகவும் காலம் தாழ்த்தி பட்டா வழங்குகின்றனர். இதிலும் அதிகாரிகள் தேவைகளை பூர்த்தி செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்குகின்றனர். ஏழை விவசாயிகளுக்கு ஒருவருடம் ஆகியும் பட்டா வழங்க மறுக்கின்றனர். எனவே தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளிடம் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சொல்லும் அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும், உடன்குடி பகுதியில் நிலத்தடி நீரை மேம்படுத்த உடன்குடி பஞ்.,யூனியன் வெங்கட்ராமானுஜபுரம் பஞ்.,ல் உள்ள தாங்கைகுளத்து கீழ்புரம் கரைப்பகுதியில் 100 அடி அகலம், 10 அடி ஆழம், ஒரு கி.மீ.,தூரம் ஆழப்படுத்தி மழைக்காலங்களில் தண்ணீரை தேக்கி வைத்தால் நிலத்தடி நீர் ஆதாரம் பெருகும். எனவே பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், தூத்துக்குடி மாவட்டத்தில் பிரசித்திப் பெற்ற திருத்தலமான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில், குலசேகரன்பட்டணம் முத்தாரம்மன் கோயில் ஆகியவை உள்ளது.

எனவே பல்வேறு இடங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தருவார்கள். குறிப்பாக கன்னியாகுமரி பகுதியில் இருந்து வரும் பக்தர்களின் நலன் கருதி நாகர்கோவிலில் இருந்து வரும் பஸ்கள் மன்னார்புரம் விலக்கிலிருந்து திசையன்விளை வந்து பின்பு மன்னார்புரம் வழியாக சுமார் 12 கி.மீ.,தூரம் வீணாகச் சுற்றி திருச்செந்தூருக்கு பஸ்கள் வருகின்றனர். இதனால் அரசுக்கும் நஷ்டம், பயணிகளுக்கும் மன உளைச்சல் ஏற்படுகிறது. எனவே நாகர்கோவிலில் இருந்து வரும் அரசு பஸ்கள் மன்னார்புரம், திசையன்விØ ள, உடன்குடி, குலசேகரன்பட்டணம் வழியாக திருச்செந்தூருக்கு இயக்கப்பட்டால் பொது மக்களுக்கும், பக்தர்களுக்கும் வசதியாக இருக்கும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றினர். இதில் தாமோதரன், கணேசன், அழகுவேல், பகவதிபாண்டியன், திருமணி, வேலாயுதம், பாண் டி, ஆத்திமுத்து, தேவாசீர்வாதம், சுபாஷ், ராஜலிங்கம், பழனி, பொங்கல்மணி உட்ப ட பலர் கலந்து கொண்டனர்.

## செயற்கை ரப்பர் உற்பத்தி 11சதவீதம் சரிவு

ஜூலை 31,2012,23:48



புதுடில்லி,: நடப்பாண்டு, ஏப்ரல் மாதத்தில், நாட்டின் செயற்கை ரப்பர் உற்பத்தி, 11 சதவீதம் சரிவடைந்து, 8,285 டன்னாக குறைந்துள்ளது. இதே மாதத்தில், இதன் பயன்பாடு, 5 சதவீதம் குறைந்து, 35,105 டன்னாக குறைந்துள்ளது என, ரப்பர் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பயன்பாடுகடந்த 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், செயற்கை ரப்பர் உற்பத்தி, 9,262 டன்னாகவும், பயன்பாடு, 36,890 டன்னாகவும் இருந்தது.கணக்கீட்டு மாதத்தில், டயர் தயாரிப்பு நிறுவனங்களின் செயற்கை ரப்பர் பயன்பாடு, 8 சதவீதம் குறைந்து, 28,062 டன்னிலிருந்து, 25,834 டன்னாக சரிவடைந்துள்ளது.கடந்த ஏப்ரல் மாதத்தில், செயற்கை ரப்பர் இறக்குமதி, 5 சதவீதம் குறைந்து, 27,868 டன்னிலிருந்து, 26,420 டன்னாக குறைந்துள்ளது. நடப்பாண்டு ஏப்ரல் மாத இறுதி நிலவரப்படி, 49,880 டன் செயற்கை ரப்பர் கையிருப்பில் இருந்தது.செயற்கை ரப்பர், மோட்டார் வாகன டயர்கள் மற்றும் சைக்கிள் டயர்கள், டியூப்கள், காலணிகள், பெல்ட், ரப்பர் குழாய்கள் போன்றவற்றின் தயாரிப்பில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.கடந்த 2011-12ம் நிதியாண்டில், உள்நாட்டில் செயற்கை ரப்பர் பயன்பாடு, 3 சதவீதம் அதிகரித்து, 4,23,350 டன்னாக உயர்ந்திருந்தது. இறக்குமதிஇது, முந்தைய 2010-11ம் நிதியாண்டில், 4,11,830 டன்னாக காணப்பட்டது. இதே ஆண்டுகளில், இதன் உற்பத்தி, 1,10,340 டன்னிலிருந்து, 1,10,599 டன்னாக வளர்ச்சிகண்டிருந்தது.கடந்த நிதியாண்டில், டயர் தயாரிப்பு துறை நிறுவனங்களின், ரப்பர் பயன்பாடு 3 சதவீதம் உயர்ந்து, 2,98,414 டன்னிலிருந்து, 3,07,325 டன்னாக அதிகரித்திருந்தது.கடந்த நிதியாண்டில், செயற்கை ரப்பர் இறக்குமதி, 8 சதவீதம் அதிகரித்து, 3,02,030 டன்னிலிருந்து, 3,27,625 டன்னாக உயர்ந்திருந்தது.

## ஆறு சிமென்ட் ஆலைகளை விற்க மத்திய அரசு முடிவு

ஜூலை 31,2012,23:44



மும்பை: பொதுத் துறையை சேர்ந்த சிமென்ட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா (சி.சி.ஐ.,) நிறுவனத்தின் ஆறு சிமென்ட் தொழிற்சாலைகளை விற்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த விற்பனை மூலம் 1, 700 கோடி ரூபாய் திரட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.உற்பத்தி திறன்பல்வேறு மாநிலங்களில், சி.சி.ஐ.,க்கு சொந்தமாக 10 சிமென்ட் ஆலைகள் உள்ளன. இவற்றில், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக, செயல்படாமல் உள்ள ஆறு ஆலைகள் (மத்திய பிரதேசம், கர்நாடகா, ஹரியானா மற்றும் டில்லியில் தலா ஓர் ஆலை, சட்டீஸ்கரில் இரண்டு ஆலைகள்) விற்பனை செய்யப்பட உள்ளன. இவற்றுடன் டில்லியில் உள்ள சிமென்ட் அரவை மையமும் விற்கப்பட உள்ளது. இரண்டு மாதங்களில், இவ்விற்பனை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.இந்த ஆறு சிமென்ட் ஆலைகளின் உற்பத்தி திறன், ஆண்டுக்கு 26.5 லட்சம் டன்னாக உள்ளது. சராசரியாக, ஒரு சிமென்ட் ஆலையின் விலை, அதன் உற்பத்தி திறன் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. ஒரு டன் உற்பத்தி திறனுக்கு 110-120 டாலர் என்ற அளவில் நிர்ணயிக்கப்படுவதாக, இத்துறையை சேர்ந்த வல்லுனர் ஒருவர் தெரிவித்தார். இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், ஆறு ஆலைகள் மூலம் 1,600 - 1,759 கோடி ரூபாய் கிடைக்கும் என தெரிகிறது.நிறுத்தி வைப்புஇந்த ஆலைகளின் சொத்துக்களை மதிப்பீடு செய்யவும், விற்பனைக்கான வழிகாட்டுதலை வழங்கவும், குழு ஒன்றை, தொழில் மற்றும் நிதி மறுசீரமைப்பு வாரியம் (பீ.ஐ.எப்.ஆர்.,) அமைத்துள்ளது.ஆந்திராவில், நலிவடைந்த அடிலாபாத் சிமென்ட் ஆலையின் விற்பனை,தொழிலாளர்களின் எதிர்ப்பு மற்றும் வழக்கு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த ஆலையை, மறுசீரமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.சிமென்ட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனத்திற்கு சொந்தமான மூன்று ஆலைகள் அசாம் (போகாஜன்), ஆந்திரா (தன்துர்), இமாச்சலப்பிரதேசம் (ரஜ்பன்) ஆகிய மாநிலங்களில் இயங்கி வருகின்றன. 14 லட்சம் டன்இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த சிமென்ட் உற்பத்தி திறன், ஆண்டுக்கு 14 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இந்நிறுவனத்தில் 988 பேர்

பணிபுரிகின்றனர்.தனியார் துறையை சேர்ந்த அல்ட்ராடெக் சிமெண்ட், லபார்கே எஸ்.ஏ. ஹோல்சிம் மற்றும் பிர்லா கார்ப்பரேஷன் நிறுவனங்கள், அவற்றின் சிமெண்ட் உற்பத்தி திறனை உயர்த்த திட்டமிட்டுள்ளன.

## நெல்ரகம் ஆடுதுறை 50 அழைக்கின்றது

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,00:00 IST



ஆடுதுறையில் இயங்கிவரும் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறை 50 என்ற புதிய நெல் ரகத்தினை தமிழ்நாடு விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. பாபட்லா 5204 என்ற நெல் ரகத்தினை சி.ஆர்.1009 என்ற ரகத்துடன் கருவொட்டு சேர்த்து ஆடுதுறை 50 ரகத்தினை உருவாக்கப் பட்டுள்ளது. இதன் வயது 150 நாட்கள். மற்றும் ரகம் சன்னமானது. தற்போது விவசாயிகள் ஆடுதுறை 50 ரகத்தை சாகுபடி செய்து வருவது குறிப்பிடத் தக்கது. வேளாண் வித்தகர் கோ.மோகன்ராஜ் யாதவ், வாஞ்சை, சங்கமங்கலம்-611 108, சிக்கல் வழி, நாகப்பட்டினம்,**மொபைல்**: 94430 14897, கடந்த மூன்று ஆண்டு காலமாக ஆடுதுறை 50 ரகத்தை சாகுபடி செய்து நல்ல பலனை அடைவதோடு விவசாயி களை இந்த புதிய ரகத்தை சாகுபடி செய்ய சிபாரிசு செய்து வருகிறார். இவர் தான் செய்த சாகுபடியில் ஏக்கரில் 1,920 கிலோ மகசூல் அதாவது 60 கிலோ கொண்ட மூடை 32 மகசூலாக எடுத்துள்ளார். 32 மூடைகளின் விலை ரூ.22,656. ஏக்கர் சாகுபடி செலவு ரூ.9,330. ஏக்கரில் நிகர லாபம் ரூ.12,326. இச்சாகுபடியின் சிறப்பு யாதெனில் விவசாயி நெல்லை இயற்கை முறையில் சாகுபடி செய்ததாகும்.
**சாகுபடி முறைகள்**: 24 குழி (8 சென்ட்) பரப்பு நாற்றங்காலில் ஒரு சென்டிற்கு 50 கிலோ தொழு உரம் வீதம் 400 கிலோ நன்கு மக்கிய தொழு உரமிட்டு பழஞ்சேற்றில் தெளிப் பரம்பில் ஒரு

ஏக்கருக்கு தேவையான ஈர விதை நேர்த்தி செய்யப் பட்ட 12 கிலோ முளை கட்டிய மூன்றாங்கொம்பு விதை விதைத்தார். விதைப்பிலிருந்து பத்தாம் நாள் (8 லிட்டர் தண்ணீரில் 2 லிட்டர் பசுங் கோமியம்+ 3 கிலோ வேப்பிலை ஊரல்)பசுங்கோமியத்துடன் கலந்து வேப்பிலை சாறு தெளிக்கப்பட்டது. நாற்றின் வயது 28 நாட்களானபோது நாற்று பறித்து உடனே நடவு செய்யப் பட்டது.

**நடவு வயலில்**: தக்கைப்பூண்டு வயலில் விதைக்கப்பட்டு 49 நாள் வயலில் மடக்கி உழவு செய்ததும் பரம்பு வைத்து 28 நாட்கள் வயது நாற்று பள்ளமான வயலில் கிழக்கு மேற்காக கயிற்று நடவு, ஒரு குத்துக்கு இரண்டு நாற்று வீதம் ஒரு குத்துக்கும் மற்றொரு குத்துக்கும் பத்து அங்குலம் இடைவெளிவிட்டு நடவு செய்யப் பட்டது. நடவின்போது 40 கிலோ கலவைப் புண்ணாக்குத்தூள் வயலில் இடப்பட்டது. நடவு நட்ட ஏழாம் நாள் பயிர் பச்சை கட்டியது. நடவு நட்ட 18, 28, 40ம் நாட்களில் களை மிதிக்கப் பட்டது. இதன்பிறகு பயிர் வளர்ச்சிக்கு ஏற்றபடி தூர்கள் தோன்ற ஆரம்பித்தன. பயிரை பூச்சி தாக்குதலிலிருந்து பாதுகாக்க நடவு நட்ட 20, 36 மற்றும் 58ம் நாட்களில் பயிரின் மீது வேம்புக் கரைசல் தெளிக்கப்பட்டது. நடவு நட்ட 95ம் நாள் மீண்டும் பயிருக்கு 30 கிலோ கலவைப் புண்ணாக்குத் தூள் மணலுடன் கலந்து வயலில் இடப் பட்டது. பயிர் நன்றாக வாளிப்பாக வளர்ந்து பூக்கத் தொடங்கியது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இவ்வாண்டு கனத்த மழை ஆரம்பத்திலிருந்தே இருந்ததால் அதிகமான தூர்களையும் பார்க்க முடியவில்லை. பள்ளமான வயல் என்பதால் தண்ணீர் வடிகட்ட சற்று சிரமமாக இருந்தது. கதிர் வெளிவந்து பால் பிடித்து முற்றும் சமயத்தில் ஒரு சில இடங்களில் வெண்சாவி தோன்றியது. ஆனால் முற்றிய கதிர்களில் கருக்காய் எதுவும் தோன்றவில்லை. நெல் மணி முற்ற முற்ற பயிர் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக காட்சியளித்தது. பயிர் 135 செ.மீ. உயரம் வளர்ந்து சி.ஆர்.1009 பயிர் போன்று காட்சியளித்ததுடன் பயிரின் மணிகள் பாபட்லா நெல் போல் சிறியதாகவும் மிகச் சன்னமாகவும் நெருக்கமாகவும் காணப்பட்டது. சாகுபடி சமயத்தில் பூச்சியோ, நோயோ இதில் தென்படவில்லை. 150 நாட்களில் பயிர் அறுவடைக்கு வந்தது.

அறுவடையில்: ஒரு ஏக்கரில் மொத்தம் 1,920 கிலோ மகசூல் கிடைத்தது. அதாவது 60 கிலோ கொண்ட 32 மூடை கிடைத்தது.

**வேளாண் வித்தகர் விவசாயிகளுக்கு கூறுவது:** இயற்கை உரச் சாகுபடியில் ஆடுதுறை 50 நெல்ரகம் சிறந்த மகசூல் கொடுக்கும் தன்மையுடையது. நாலரை அடி (135 செ.மீ) உயரம் வளரும் தன்மைஉடையது. இந்த நெல் ரகத்தினை நடவின்போது 10 அங்குலம் து 10 இடைவெளி விட்டு பள்ளமான வயல்களில் ஒரு குத்துக்கு இரண்டு நாற்று வீதமும் தண்ணீர் தேங்காத சமமான வயல்களில் குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்யவும். இவ்வாறு அதிக இடைவெளி விட்டு நடுவதால் தூர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நாற்றின் வயதுகுறைந்தது 18 நாட்களிலும் அதிகபட்சம் 28 நாட்களுக்கு முன்னதாகவும் பறித்து நடவு செய்யும் குத்துக்களில் அதிகபட்சமாக 38 தூர்கள் சர்வ சாதாரணமாகத் தோன்றியது. ரவையில் அரிசி வெள்ளையாகவும் சன்னமாகவும்

உள்ளது. 100 கிலோ நெல்லில் 64 கிலோ உடையாத பச்சரிசி கிடைக்கிறது. சாகுபடி செலவைக் குறைத்து, அறுவடைக்குப் பிறகு நெல்லை அரிசியாக மதிப்பூட்டி விற்பனை செய்தால் இயற்கையில் விளையும் இந்த ரகத்தில் சிறந்த லாபம் பெறலாம். இந்த நெல் ரகம் தமிழக விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதமாகும். பள்ள மான இடங்களில் சி.ஆர்.1009க்குப் பதிலாக இந்த ரகத்தை சாகுபடி செய்தால் ஒரு மூடைக்கு ரூ.30 கூடுதலாக விலை கிடைக்கிறது.-எஸ்.எஸ்.நாகராஜன்

## நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,00:00 IST



அழகு புல்தரை அமைக்க தெரிவு செய்யப்பட்ட நிலத்தை முதலில் 45செ.மீ. ஆழத்திற்கு உழுது நன்கு கொத்தி புழுதியாக்கி, அதிலுள்ள சிறு கற்கள், பெரிய கட்டிகள், கோரைக் கிழங்கு, அருகம்புல்லின் கிழங்கு போன்றவற்றைச் சுத்தமாக பொறுக்கி எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். பின் மக்கிய எருவையோ, மக்கிய மாட்டுச்சாணத்தையோ ஒரு சதுர மீட்டருக்கு 2 கிலோ என்ற அளவில் இட்டு நிலப்பரப்பை சமன்படுத்த வேண்டும். சமப்படுத்தும்பொழுது மழைநீர் வடிவதற்காக 3 மீட்டர் பரப்புக்கு 15 செ.மீ. சரிவுகொடுத்து சமப்படுத்துதல் வேண்டும். இவ்வாறு தயார் செய்த நிலத்திற்கு இருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்தால் மண் நன்குபடிந்து அதில் உள்ள களைகள் முளைக்கும். அவற்றை எடுத்துவிட்டு மீண்டும் கொத்தி சமன்படுத்த வேண்டும்.

**அழகு புல் வகைகள்**: புல்தரை அமைப்பதற்கு அருகம்புல், செயின்ட் அகஸ்டியன் புல், உப்பருகு, நீலப்புல், சங்கிலிப்புல், ஜப்பான்புல், மணிலாப் புல், கொரியன்புல், ஐதராபாத் புல், குட்டை பெர்முடா ஆகிய வகைகளை பயன்படுத்தலாம். ஒவ்வொரு வகை புல் இனத்திற்கும் வெவ்வேறு

தனித்தன்மையும் பயன்பாடும் உண்டு.

**புல்தரை அமைக்கும் முறைகள்**: புல்தரை விதைகள் புல்பாய் நடவு, மண் சாணி கலந்து நடுதல், கரணை அல்லது கிழங்கு ஊன்றும் முறை ஆகியவையாகும்.

**விதை**: நன்கு தயார் செய்த நிலத்தில் ஒரு பங்கு விதைக்கு ஐந்து பங்கு மணல் கலந்து, 2 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 2.5 கிராம் விதை தேவைப் படும். விதைக்கும் முன் மண்ணை முள்கொத்தால் நன்கு கிளறிவிட்டு விதைத்த பின் விதைகளைக் குளத்துமண் கொண்டு மூடவேண்டும். ஒரு மீட்டருக்கு 10 கிராம் லிண்டேன் மருந்து தூவி எறும்பு வராமல் தடுக்க வேண்டும். பின் பூவாளி கொண்டு தண்ணீர் தெளிக்க வேண்டும். விதை முளைக்க 5 வாரம் ஆகும். புல் 5 செ.மீ. உயரம் வளர்ந்தபின் அறுத்துவிட வேண்டும். இந்த நிலையில் புல்தரை கருவியைக்கொண்டு கத்தரிக்கக் கூடாது. பின் உருளை கொண்டு நன்கு உருட்டிவிட்டால் புல் நன்றாக படியும்.

**புல் பாய் நடவு:** குறுகிய காலத்தில் புல்தரைகளை அமைக்க குளக்கரைகள், ஆற்றோரங்களில் ஏற்கனவே வளர்ந்த புல் தரைகளை சதுரவடிவ பத்தைகளாக வெட்டி எடுத்து வந்து தேவையான இடத்தில் மரக்கட்டைப் பிடி கொண்டு அப்பத்தைகளை ஒரே சீராகவும் சமமாகவும் படியுமாறு தட்ட வேண்டும். பின் சற்று கனமான கல் உருளையைக் கொண்டு (ரோலர்) சுமார் 5 முதல் 6 நாட்களுக்கு ஒரு முறை, 2 முதல் 3 தடவைகள் உருட்டிவிட வேண்டும்.

**நடவு**: இந்த முறையில் புல்லின் வேர்களை 5 செ.மீ. நீளமுள்ளதாக நறுக்கிக் கொள்ள வேண்டும். நறுக்கிய வேர்களை ஒரு பங்கு மாட்டுச்சாணி கொண்ட கலவையில் கலந்து அதைத் தயார்செய்த நிலத்தில் பரப்பி அதன் மேல் வைக்கோல் கொண்டு மூடவேண்டும். பின்னர் பூ வாளியைக் கொண்டுதண்ணீர் தெளிக்க வேண்டும். அதன்பின் 2 நாட்களுக்கு ஒரு முறை நீர் தெளிக்க வேண்டும். அதன்பின் 3 நாட்களக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். புற்கள் 15 நாட்களுக்குள் துளிர்விட்டு வளர ஆரம்பிக்கும்.

**கரணை அல்லது கிழங்கு ஊன்றுதல்:** அருகம்புல்லின் கிழங்குகளை 5 செ.மீ. இடைவெளி கொடுத்து நாற்று நடுவதுபோல் சமப்படுத்தப்பட்ட, எரு இட்ட நிலத்தில் நடவேண்டும். 15 நாட்களுக்குள் புல் துளிர்விட்டு வளர ஆரம்பிக்கும்.

**பராமரிப்பு:** உருளை கொண்டு உருட்டுதல்-இதனால் மேடு பள்ளங்கள் சமமாக்கப்படும். தக்க ஈரப் பதம் உள்ளபொழுது உருளையைக் கொண்டு உருட்டவேண்டும். நிலம் மிகவும் ஈரமாகவோ, காய்ந்தோ இருக்கும்போது உருட்டுதல் கூடாது.

**வெட்டும் கருவி கொண்டு வெட்டுதல்**: வளரும் புல்லை பூக்கவிடாமல் வெட்டிவிடுவது அவசியம். புல் தரைக் கருவியோ அல்லது வீச்சுக் கத்தி கொண்டோ 15 நாட்களுக்கு ஒரு முறை வெட்டிவிட வேண்டும்.

**உரமிடுதல்**: வருடம் இருமுறை சதுரமீட்டருக்கு ஒரு கிலோ மாட்டு எரு, 30 கிராம் அம்மோனியம் சல்பேட், 16 கிராம் சூப்பர் பாஸ்பேட், 16 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் இடவேண்டும்.

உரமிட்டபிறகு நன்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.
**களைக்கட்டுப்பாடு**: புல் தரையில் கோரை வகை களைகள் அதிகம் வளர்ந்து காணப்படும். இவற்றை கூர்மையான ஊசிகொண்டு கிழங்கு களைக் குத்தி அகற்றிவிடுவதன் மூலமும் அன்சார் என்ற களைக் கொல்லியை லிட்டருக்கு 3 மிலி என்ற அளவில் நீரில் கரைத்து தெளிப்பதன் மூலமும் கட்டுப் படுத்தலாம். அகன்ற இலைக் களைகளைக் கட்டுப்படுத்த 2, 4-டி என்ற களைக்கொல்லியை ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பயன்படுத்த வேண்டும். (தகவல்: முனைவர் பா.கண்ணன், மு.ஜவஹர்லால், ப.ரஞ்சனி, மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.
போன்: 0422-661 1230)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## மருத்துவ குணம்மிக்க பாரம்பரிய உணவுகளை பதப்படுத்துவதற்கான தொழில்நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2012,00:00 IST

உணவு உற்பத்தியில் சிறுதானியங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். பழங்காலங்களில் மக்களின் உணவில் சிறுதானியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட போதிலும், நாகரீகம் என்ற பெயரில் சிறு தானிய வகைகளான சோளம், கம்பு, வரகு, திணை, சாமை, குதிரைவாலி போன்றவை மக்களிடையே முக்கியத் துவத்தை இழந்தது. முன்பெல்லாம் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை தினங்களில் மட்டுமே நெல் அரிசி சமையல் இருக்கும். மற்ற நாட்களில் சிறுதானிய உணவுகளை உண்பார்கள். எனவேதான் அந்த காலத்தில் எல்லோரும் ஆரோக்கியமாக இருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அதையெல்லாம் ஒதுக்க ஆரம்பித்தபிறகுதான் சர்க்கரைநோய், ரத்த அழுத்தம் போன்ற ஏகப்பட்ட நோய்களில் சிக்கித்தவிக்கிறோம். இன்றைய தலைமுறையினர் சிறு தானியங்களை பார்த்ததுகூட இல்லை. தற்போது நோய்களின் தாக்கத்தால் சிறுதானிய உணவுகளை மக்கள் ஏற்க முன்வந்துள்ளனர். இதனை கருத்தில் கொண்டு சிறுதானிய உணவுகளை உடனடி உணவாகவும் எல்லா வயதினர் மற்றும் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களும் உட்கொள்ளும் வகையிலும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. சுமார் 30 வகை சிறுதானிய உணவுகளை அன்றாடம் உபயோகிக்கும் வகையில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வுணவுகளின் தரம் மற்றும் சத்துக்கள் முதலிய வையும் கண்டறியப்பட்டது. தயாரிக்கப் பட்ட சிறுதானிய உணவுகளில் சுமார் 15 கிராம் முதல் 25 கிராம் வரை புரதச் சத்தும் 5 முதல் 8 கிராம் வரை நார்ச்சத்து மற்றும் கால்சியம், பாஸ்பரஸ், சோடியம் போன்ற தாது உப்புக்களும் அதிகளவில் உள்ளது. சிறுதானிய உணவுகளை விரும்பி சாப்பிட மக்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள். இன்றைய காலத்திற்கேற்ப மாற்றிக் கொடுத்தால் நிச்சயம் மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்வார்கள். இதனால் சிறுதானியத்தின் உபயோகம் அதிகரிக்கும்போது

விவசாயிகளும் அதிகம் உற்பத்தி செய்ய வாய்ப்பு உண்டு. விவசாய பெருமக்களே உற்பத்தி செய்த சிறுதானியங்களை மாற்று பொருளாக பதப்படுத்தி விற்பனை செய்யும்போது விவசாயிகள் வருமானம் பெருகும்.

அதேபோல் கீரைகளில் உடலுக்கு தேவையான வைட்டமின்கள், தாது உப்புக்கள் தக்க அளவில் உள்ளன. இவை உடலுக்கு மிக குறைந்த அளவே தேவைப்படுகிறது. இக்கீரை உணவை சரிவர உட்கொள்ளாவிடில் பல நோய்கள் தாக்குவதற்கு வழி ஏற்படும். இக்கீரைகளில் மணத்தக்காளி கீரை உடல் ஆரோக்கியத்திற்கான சத்துக்கள் நிறைந்திருப்பதோடு பல மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது. சித்தா, ஆயுர்வேத மருந்துகளில் இக்கீரை அதிகம் உபயோகிப்பது கண்டறியப்பட்டது. ஆராய்ச்சியில் வயிற்றுப்புண் (அல்சர்) குணப்படுத்தும் தன்மை உள்ளது கண்டறியப்பட்டது. மணத்தக்காளியில் உள்ள சொலனின், ஆல்கலாய்டு, சல்போனின் போன்ற வகைகளுக்கும் புண்களை ஆற்றும் தன்மை உள்ளது. இக்கீரை சளி, இருமல் போன்றவற்றிற்கும் நல்ல மருந்தாகும். இம்மருத்துவ குணம்மிக்க கீரையை உபயோகித்து பலதானிய மிக்ஸ், ரொட்டி மிக்ஸ், சூப் மிக்ஸ் போன்ற பல உணவுகளை தயாரிக்கலாம்.

பழங்களில் வில்வம்பழம் பண்டை காலத்திலிருந்தே மூலிகை மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் வைட்டமின்கள் மற்றும் மார்மலோசின், ஈகிலின், ஆனத்தோசயனின் போன்ற மருத்துவ தன்மை உள்ளது. இவ்வகை அனைத்து உணவுகளையும் தொழில் ரீதியாக பதப்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப் படுகிறது. அதோடு அதற்கான இயந்திரங்கள், பேக்கிங் முறைகள் பற்றிய விவரங்களும் அளிப்பதுடன் இத்தொழில் நுட்பங்களுக்கான செய்முறை பயிற்சியும் அளிக்கப் படுகிறது. மேலும் விபரங்களுக்கு:

டாக்டர் சி.பார்வதி,பேராசிரியர் மற்றும் தலைவர்,மனையியல் விரிவாக்கத்துறை,
மனையியல் கல்லூரி மற்றும் ,ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.0452-242 4684, 94422 19710, 97871 50703.

## மக்காச்சோளம் வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2012,23:40 IST

சின்னசேலம் : சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச்சோளம், எள் வரத்து அதிகரித்தது. சின்னசேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு மக்காச்சோளம், எள், மணிலா, கம்பு உள்ளிட்ட விளை பொருட்களை விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். நேற்று முன்தினம் 600 மூட்டை மக்காச்சோளம், 16 மூட்டை எள் வந்தது. அதிகபட்ச விலையாக மக்காசோளம் மூட்டை 1,419 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 896க்கும், எள் அதிகபட் சமாக 6,211 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 5,469 ரூபா#க்கும் விலை போனது.

கடந்த வாரம் 2,676 மூட்டை மக்காசோளம் 37 லட்சத்து 54, 875 ரூபாய்க்கும், 47 மூட்டை எள் 2 லட்சத்து 55,441 ரூபாய்க்கும், 16 மூட்டை கம்பு 20,484 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

**தேயிலை ஏலத்தில் 93 சதவீத விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2012,22:04 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏலத்தில் வரத்து குறைந்துள்ள நிலையிலும், 93 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில் நடந்த 30வது ஏலத்தில், 17 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 12.74 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.26 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த வாரம் 93 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

சாதாரண இலை ரகத்துக்கு சராசரியாக ஒரு கிலோவுக்கு 58-62 ரூபாய் வரையிலும், உயர்ரகம் 100-140 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

சாதாரண டஸ்ட் ரகத்துக்கு 60 முதல் 71 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 100 முதல் 145 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் சி.டி.சி., டஸ்ட் ரக தேயிலை தூள் ஒரு கிலோ 155 ரூபாய்க்கு விற்பனையானது. சாம்ராஜ் எஸ்டேட் ஆர்தடக்ஸ் ரக தேயிலை அதிகபட்சமாக ஒரு கிலோ 208 ரூபாய்க்கு விற்பனையானது.

கடந்த வாரம் தேயிலை விலையில், 2 ரூபாய் விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஏலத்தில் ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் மற்றும் உள் நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில்,வரும் வியாழன் மற்றும் வெள்ளி கிழமை நடக்கும் 31வது ஏலம் ஆகஸ்ட் மாதம் 2 மற்றும் 3ம் தேதிகளில் நடக்கிறது. இதில் 14 லட்சத்து 47 ஆயிரம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.